

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ.தாராபுரம் நகர் பகுதியில் கடை கடையாகச் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். மேலும் தினேஷ், துபாய் சாகுல், மானூர் ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், அருள்மணி,மாரியப்பன், கருப்பசாமி கோட்டை யப்பன், லி.மீரான் மைதீன் உள்ளட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நமது வெற்றி வேட்பாளரை ஆதரித்து கழகத் தேர்தல் பணிக்குழுத் தலைவர் மேனாள் அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ. தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

மாற்றுத் திறனாளி சிறுமி பாலியல் வன்கொடுமை:

சொரணையற்ற அரசே! நீதி வேண்டும்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி ட்விட்டர் பதிவு!



சென்னை, செப்.29- மாற்றுத் திறனாளி சிறுமி பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக் கப்பட்டதற்கு வேதனை தெரிவித்துள்ள துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள், சொரணையற்ற இந்த அரசு பாதுகாப்பும், நீதி யும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு சமூக வலை தளப்பக்கத்தில் பதிவிட் டுள்ளார்.

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனி மொழி ராஜாத்தி கருணா நிதி அவர்களின் ட்விட் டர் பதிவு வருமாறு:-

மதுராந்தகம் அருகே கொங்கரையில் மாற்றுத் திறனாளி சிறுமி பாலி யல் வன்கொடுமைக்கு உ ள் ள ா க் க ப் ப ட் ட செய்தி மிகுந்த வேதனை யளிக்கிறது.

இன்னும் எத்தனை கொடுஞ்செய்திகளை தமிழ்நாட்டு மக்கள் கேட்க வேண்டும் என்று இந்த த.வெ.க. அரசு எதிர்பார்க்கிறது?

உ யி ர ச் ச த் தி ல் உறைந்து போய் உள்ள மக்களின் குரல் கூட இந்த சொரணையற்ற அரசின் காதுகளுக்கு கேட்கவில்லையா?

உடனடியாக குற்ற வாளிகளை கைது செய்து, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உரிய பாது காப்பும் நீதியும் கிடைப் பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பதி விட்டுள்ளார்.

ஜெம் வீரமணி வழக்கில் 70 நாட்கள்

குற்றவாளியை கைது செய்யாமல் பாதுகாத்தது யார்? இடைப்பட்ட காலத்தில் நடந்த பேரம் என்ன?

'டம்மி' முதலமைச்சருக்கு தி.மு.க.வின் ஐ.டி. பிரிவு கேள்வி!

சென்னை, செப்.29-

ஜெம் வீரமணி வழக்கில் 70 நாட் கள் குற்றவாளியை கைது செய்யா மல் பாதுகாத்தது யார்? இடைப்பட்ட காலத்தில் நடந்த பேரம் என்ன? என்று 'டம்மி' முதலமைச்சருக்கு தி.மு.க.வின் ஐ.டி. பிரிவு கேள்வி எழுப்பியுள்ளது.

தி.மு.க. ஐ.டி.விங்கின் வலைதள ப்பதிவு வருமாறு:-

ஜெம் கிரானைட் வீரமணியின் போக்சோ வழக்கில், நீதிமன்றம் தலை யில் குட்டிய பிறகுதான் தவெக அர சுக்கு ஞானோதயம் வந்ததா? "நாங்கள் தான் நடவடிக்கை எடுத்தோம் என்று மார்தட்டும் டம்மி முதல்வரை நோக்கிச் சில நேரடியான கேள்விகள்:

மே 10ம் தேதியே த.வெ.க. அரசு பொறுப்பேற்றுவிட்டது. ஜூன் 19 அன்று ஜெம் வீரமணி வழக்கு விசாரணைக்கு வந்த போது, வழக் கின் முடிப்பு அறிக்கையை (FAD Report), "மேல்விசாரணை தேவை என்று கூறித் திரும்பப் பெற அரசுத் தரப்பு வழக்கறிஞருக்கு (PP) தவெக அரசு ஏன் உத்தரவிடவில்லை?

ஜூன் 19 அன்று, உங்கள் காவல் துறை, வழக்கை முடித்து வைப்ப தாக கோரியதை ஏற்க மறுத்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி, அதைத் தூக்கி யெறிந்துவிட்டு மேல்விசார ணைக்கு உத்தரவிட்டார்.

குற்றவாளிக்கு எதிரான வீடியோ ஆதாரங்கள் மிகத் தெளிவாக இருந் தும், நீதிமன்றம் குட்டு வைத்த ஜூன் 19 அன்றே வீரமணியை உடனே கைது செய்யாமல் தடுத்து நிறுத்தியது யார்?

ஜூன் 19 முதல் ஜூலை 20 வரை உங்கள் ஆட்சியில் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதன் மர்மம் என்ன?

ஜூலை 20ம் தேதி நடந்த அடுத்த விசாரணையின் போதும் நீதிமன் றத்தில் ஆஜராகி, "விசாரணை இன்னும் நிலுவையில் உள்ளது என்று இழுத்த டித்தது உங்கள் காவல் துறை.

ஜூன் 19ல் நீதிபதி உத்தரவிட்ட பிற கும், ஆகஸ்ட் 29 வரை குற்ற வாளி யைக் கைது செய்யாமல் 70 நாட்களா கப் பாதுகாத்தது யார்? இடைப்பட்ட காலத்தில் நடந்த பேரம் என்ன?

உடனடியாக நடவடிக்கை எடுத்தி ருக்க வேண்டிய காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் உள்துறை அமைச்சர் வேறு யாருமல்ல, இதே 'டம்மி' முதலமைச்சர் விஜய்தான்!

அப்படியானால், ஒரு பாலியல் குற்றவாளியைக் காப்பாற்ற முதல மைச்சரே உத்தரவிட்டாரா?

நீதிமன்றம் குட்டு வைத்து, வேறு வழியில்லாமல் ஆகஸ்ட் இறுதியில் கைது செய்துவிட்டு. இப்போது ஏதோ நீங்களே கண்டுபிடித்துத் தண்டித்த தைப் போல இடைத்தேர்தல் மேடை யில் 'கிரெடிட்' திருட உங்களுக்கு வெட் கமாக இல்லையா மிஸ்டர் விஜய்?

இந்த வழக்கையே வரப்போகும் இடைத்தேர்தலுக்கு ஒரு மலிவான Political Toolkit ஆகப் பயன்படுத் திப் பொய் பிரச்சாரம் செய்ய உங்க ளுக்கு மனசாட்சியே இல்லையா?

ஒரு போக்சோ வழக்கில் நீதிமன் றத்தின் உத்தரவால் நடக்கும் விசார ணையைத் தன் சாதனையாகக் காட் டிக்கொண்டு, தேர்தல் ஆதாயத்திற் காகப் பெண்களின் பாதுகாப்பைப் பணயம் வைக்கும் அளவிற்குத் த. வெ.க. ஆட்சி எவ்வளவு கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்ப தைத் தமிழ்நாடு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங்கின் வலைதளப்பதிவில் கூறப்பட்டுள்ளது.

அக். 6 - அன்று

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வீடு முன் ஆர்ப்பாட்டம்!

நெடுஞ்சாலைத்துறை பட்டயப் பொறியாளர் சங்கம் அறிவிப்பு!

விருதுநகர், செப். 29 – நெடுஞ்சாலைத்துறையில் நீடிக் கும் நிர்வாக குளறுபடிகளை சரி செய்ய கோரி வரும் அக். 6ம் தேதி அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வீட்டு முன்பு போராட்டம் நடத்தப்படும் என தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை பட்டய பொறியாளர்கள் சங் கத்தின் மாநில பொதுச்செயலாளர் மாரிமுத்து வெளியிட்டுள்ள அறிக்கை:

நெடுஞ்சாலைத்துறையில் கடந்த 4 மாதங்களாக நிர்வாக குள றுபடிகள் நீடித்து வருகின்றன. உதவி பொறியாளர்கள், இள நிலை பொறியாளர்கள் மற்றும் உதவி கோட்ட பொறியாளர்கள் பணியிட மாறுதல் வெளிப்படை யாக நடைபெறவில்லை.

குறிப்பாக ஒரே இடத்தில் 5 வரு டங்களுக்கு மேல் பணிபுரிந்தவர் களை தற்போது வரை பணியிட மாறுதல் செய்யவில்லை. மேலும் பல்வேறு பணிநிலை அலுவலர்க ளுக்கு ஆண்டுதோறும் வழங்கக்கூ டிய பதவி உயர்வுகள் உரிய காலத் தில் வழங்கப்படவில்லை.

மறுசீரமைப்பில் உருவாக்கப்பட் டுள்ள அலுவலகத்தில் பணியாற் றும் அலுவலர்களுக்கு அடிப்படை வசதிகளும் முறையாக செய்து தர வில்லை.

புதிய சாலை மற்றும் பாலப் பணிகள் சம்பந்தமாக மதிப்பீடு தயார் செய்வதற்கு உரிய செலவினங்களை உதவி பொறியா ளர், இளநிலை பொறியாளர்கள் எந்த அடிப்படையில் பெற வேண் டும் என்ற நிர்வாக உத்தரவுகள் இல்லை.

இதனால் பல ஆயிரம் செலவு செய்த உதவி பொறியாளர், இள நிலை பொறியாளர் ஆகியோர் பெரும் மனஉளைச்சலில் உள்ள னர்.

எனவே, இந்த கோரிக்கை களை வலியுறுத்தி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பட்டய பொறியாளர்கள் சங்கம் சார்பில், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வீடு முன்பு அக். 6ம் தேதி பெருந்திரள் முறையீடு போராட்டம் நடத்துவது என முடிவு செய்துள்ளோம். இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

ஆணவம்.....!

ஆசைக்கு இணங்கும்
"எந்திரங்கள்" இருக்க
ஆதவ்-களுக்கு
ஆணவச் சவால்கள்
சாதாரணம் தானே ...

ஆனாலும்
ஒன்று

தேங்காயோ
பூசணியோ

தலைக்கு மேலே தூக்கப்படுவது
எல்லாமும்
ஓர் நாள்

தரையில்
போட்டு
உடைக்கப்படும்...

விசிலுக்கு
சங்கு ஊதும் வேளை
விரைந்து வருகிறது..

என்னநாஞ் சொல்றது..



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்




மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் நமது வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழகத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சின்னக்காம்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் திலீப் ராஜகண்ணப்பன் வாக்கு சேகரித்தார். உடன் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. முனியசாமி

செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.வின் மாமியார்

பிரேமா ராஜகுமாரி அம்மையார் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 29 -

திருவாரூர் மாவட்டக் கழகச்செயலாளரும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி.கே. கலைவாணன் அவர்களின் மாமியார் பிரேமா ராஜகுமாரி அம்மையார் (82) அவர்கள் 27.09.2026 ஞாயிறு அன்று மறைவெய் தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பிரேமா ராஜகுமாரி அம்மையாருக்கு கென் னடி, ராஜராஜன் என்கின்ற இரு மகன்களும், நளினி, ரஷ்யா, சிந்தனை, இந்திரா ஆகிய நான்கு மகள்களும் உள்ளனர்.

பிரேமா ராஜகுமாரி அம்மையாரின் மறைவின் தகவ லறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரி வித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா.பா.சா.பன்னீர்செல்வம்

செப்டம்பர் 29 (2014)



கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.